Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. தமிழ் உயர்மொழி, தனிமொழி என்று உரைக்கப்படக் காரணங்கள் யாவை ?

2. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் இக்கருத்தை திரு.வி.க. வழி நின்று ஆய்க.

3. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

4. நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

5. ஈகைப் பண்பில் தமிழ் மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

[ Turn over

**II.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை தருக : $3 \times 4 = 12$

6. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை ?

7. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்து உரைப்பன யாவை ?

8. செல்வம் நிலைபேறு உடையதன்று என்பதை நாலடி எங்ஙனம் நயம் நவில்கிறது ?

9. தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உரைப்பனவற்றை விளக்குக.

10. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

**III.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** (இருபது வரிகளின் மிகாது) விடை எழுதுக : $1 \times 6 = 6$

11. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. ஓவியக் கலை தமிழகத்தில் சிறந்திருந்தது என்பதை விளக்குக.

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களின் மிகாமல் விடை எழுதுக : $2 \times 10 = 20$

13. *'ஆயா'* அல்லது *'வேலி'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'பால் வண்ணம் பிள்ளை' அல்லது 'சட்டை'* என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'ஒவ்வொரு கல்யாய்'* அல்லது *'பழிக்குப் பழி'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

துணி - இக்கதையைக் கிழவி ஒருத்தி கூற்றாக எடுத்து வரைக.

*அல்லது*

நேர்மை தவறாத மாணிக்கம் அந்தப் பண்பில் தவறாது வாழ்க்கையில் பாடுபட்டு உயர்ந்ததாக ஒரு கதை எழுதுக.

[ Turn over

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அவற்றில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அப்பாடல்களில் அமைந்துள்ள எதுகை, மோனை, முரண், அணி, சந்தச் சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றை எடுத்து எழுதுக. 1 × 10 = 10

''சொல்லுவது எல்லார்க்கும் சுலபமாகும்
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்
எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள்
எழுதியது பிறருக்கே நமக்கென்றெண்ணார்
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
சொன்னது போல் செயல்முயன்றார் இவரைப்போல
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம்.
அச்சமிகும் பேடிமையின் அடிமை வாழ்வில்
அடங்கியிருந் தறம் மறந்த தமிழர் நாட்டைப்
பச்சை மரத் தாணியெனப் பதியும் சொல்லால்
பாட்டிசைத்துப் பாலர்களும் நிமிர்ந்து நின்று
நிச்சயம்எந் தாய்நாட்டின் அடிமை வாழ்வை
நீக்காமல் விடுவதில்லை எனமுன் வந்து
துச்சமெனச் சுகத்தையெல்லாம் துறந்து நிற்கத்
தூண்டியது பாரதியின் சொல்லே யாகும்.''

– நாமக்கல் கவிஞர்.

VI. பின் வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக.

$3 \times 2 = 6$

16. East or west home is best.

17. Do not rob Peter to pay Paul.

18. Make hay while the Sunshines.

19. As is the king, so are his subjects.

20. The Government announced some schemes.

21. Many thanks for your kind message of Greetings.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து ( பத்து வரிகளில் ) எழுதுக. $1 \times 4 = 4$

அ) வாய்மையே வெல்லும்

ஆ) மின்னுவதெல்லாம் பொன்னல்ல

இ) முயற்சி திருவினையாக்கும்.

அல்லது

*'தென்றல்' அல்லது 'மயில்' என்னும் தலைப்பில் சிந்தித்து உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை ( 8 அடிகளுக்குக் குறையாமலும் 10 அடிகளுக்கு மிகாமலும் ) எழுதுக.*

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. 10 × 1 = 10

23. ஒன்றோ அல்லது இரண்டோ தருக.

( வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. சாரை பாம்பு குருவிகூட்டில் நுழைந்தது.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. அரை, அறை அல்லது காலை, காளை

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

26. 'வீக் ஆன என் ஆண்ட்டி ரெஸ்ட் எடுக்க வேண்டும்' என்று ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் அட்வைஸ் கூறினார்.

( பிறமொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக).

27. ஒருத்தன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்கோலமா ?

( கொச்சையான வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக ).

28. ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் நாமகரணத்தை இந்தக் கப்பலுக்குச் சூட்டுவதில் ஸந்தோஷம் அடைகிறேன் என்றார் மூதறிஞர் இராஜாஜி.

( பிறமொழிச் சொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக).

29. குபுக்குபுவென்றுப் புகை மண்டிலம் சூழ்ந்தது.

( தேவையற்ற இடங்களில் அமைந்துள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக).

30. காட்ல யானை கத்தியது, நரி கூவியது, புலி சத்தமிட்டது.

( வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக).

31. பணையோளை விசிறியில் விசிரியதனால் கைவிறல் வலித்தது.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக).

32. எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் சோதி என்று சுவாமிகள் அருளிச் செய்துள்ளார் இச்சபை அந்நோக்குடன் சுவாமிகளால் நிறுவப்பட்டது

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).